அசல் வழக்கு எண். 133/2018 தேதி-20.11..2023.

வா.சா.1 – அண்ணாவி

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ள கிரைய பத்திரங்களின் அசல் அனைத்தும் என்னிடம் உள்ளது. அசல் கிரைய பத்திரங்கள் தாக்கல் செய்யாமல் உள்ளதற்கு காரணம் எதுவும் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லவில்லை. 1986 ம் வருடம் சர்வே எண்.558/1 ஏ மற்றும் 558/2 சி ஆகிய சொத்துக்களை தங்கராஜிடம் கிரையம் பெற்றேன். மேற்படி கிரைய பத்திரத்தின் அசல் என்னிடம் உள்ளது. தங்கராஜிடம் ஏக்கர் 1. 07 சென்ட் கிரையம் பெற்றுள்ளேன். தங்கராஜிக்கு மேற்படி சொத்துக்கள் எவ்வாறு பாத்தியம் என்பதற்கு ஆவணங்கள் உள்ளது. தங்கராஜ் கிரையம் பெற்ற சொத்துக்களை நான் அவரிடம் கிரையம் பெற்றேன். பொன்னுசாமி , மாணிக்கம் மற்றும் ஆறுமுகம் ஆகியோரிடம் சொத்துக்களை தங்கராஜ் 1995 ம் வருடம் கிரையம் பெற்றார். தங்கராஜ் கிரையம் பெற்றது ஏக்கர் 1. 07 சென்ட் ஆகும். நான் தங்கராஜிடமிருந்து ஏக்கர் 1. 07 சென்ட் கிரையம் பெற்ற போது அதற்கான மூல ஆவணங்களை பெற்றேன்.

2. அதற்கான அசல் கிரைய பத்திரம் என்னிடம் உள்ளது. மேற்படி மூல கிரைய பத்திரம் மற்றும் எனது அசல் கிரைய பத்திரம் ஆகியவற்றை தாக்கல் செய்தால் அதன் அளவுகள் வேறுபாடு உள்ளது என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் தங்கராஜ் கிரையம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவண எண் குறிப்பிட்டு வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமானது தங்கராஜ் மற்றும் பொன்னுசாமி ஆகியோர்களிடமிருந்து என்னால் கிரையம் பெற்ற ஆவணமாகும். வா.சா.ஆ.2 கிரைய பத்திரம் தங்கராஜ் பெயரில் தனிப்பட்ட முறையில் ஏற்பட்டதாகும். வா.சா.ஆ.2 ன் மூலம் தங்கராஜ் கிரையம் பெற்ற சொத்தை வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ளேன். பொன்னுசாமி பிள்ளை எதன் அடிப்படையில் தரப்பினராக உள்ளார் என வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தங்கராஜின் தந்தை என்பதால் தரப்பினராக உள்ளார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தின் சர்வே எண்.558/1 ஏ 8 ஆகும். அதன் மொத்த விஸ்திரணம் தெரியவில்லை. மொத்த விஸ்திரணத்தையும் கிரையம் பெற்றுள்ளேன். சர்வே எண்.558/1 ஏ 8 ன் மொத்த விஸ்திரணம் 0.66.5 ஹெக்டேர்ஸ் (ஏக்கர் 1.65 சென்ட் ) என்றால் அது பற்றி தெரியவில்லை.

3. வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஏக்கர் 1.65 சென்டில் ஏக்கர் 1.07 சென்ட் கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் காரணமாக சர்வே எண்.558/1 ஏ 8 ல் உள்ள முழு சொத்தும் எனக்கு சொந்தமானது இல்லை என்றால் சரிதான். 2000 மற்றும் 2004 ம் வருடங்களில் வீரமணி என்பவரிடம் சர்வே எண்.558/2 சி -ல் உள்ள சொத்துக்களை கிரையம் பெற்றேன். வா.சா.ஆ.3 கிரைய பத்திரம் வீரமணி மட்டும் எழுதி கொடுத்தார். வீரமணி எனது குடும்ப உறுப்பினரோ , பங்காளியோ அல்ல. சர்வே எண்.558/2 சி ல் 2000 ம் வருடத்தில் 55 சென்டும், 2004 ம் வருடத்தில் 23 சென்டும் கிரையம் பெற்றேன். சர்வே எண்.558/2 சி ல் மொத்தம் 78 சென்ட் கிரையம் பெற்றேன். 78 சென்டிற்கு என் பெயரில் பட்டா உள்ளது. வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணம் சர்வே எண்.558/2 சி -ற்கான கிரைய ஆவணங்கள் ஆகும். வருவாய் துறை ஆவணங்கள் மற்றும் உரிமை மூல ஆவணங்களை பார்த்து மேற்படி சொத்தை கிரையம் பெற்றேன்.

4. வா.சா.ஆ.3 மற்றம் 4 ஆவணங்களில் சர்வே எண்.558/2 சி -ல் ஏர்ஸ் 0.25.5 க்கு திட்டம் ஏக்.0.63 சென்ட் என உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணம் மூலம் ஏக்.0.63 சென்ட் மட்டுமே உள்ளது என்றும், நான் அதில் 78 சென்ட் கிரையம் பெற்றதாக சொல்வது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற 78 சென்ட் நிலம் வீரமணிக்கு முழுமையாக பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.558/1 ஏ 8 ல் வீரமணியிடம் 55 சென்ட் கிரையம் பெற்றேன். வீரமணிக்கு சர்வே எண்.558/1 ஏ 8 ல் பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. எனது ஆவணத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.558/1 ஏ 8 ன் அளவுகள் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 4 வரையான ஆவணங்களுக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 4 வரையான ஆவணங்களில் தங்கராஜ் மற்றும் பொன்னுசாமி ஆகியோர்களுக்கு பாகம் மூலம் கிடைத்த சொத்து என குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 2011 ம் வருடம் வா.சா.ஆ.5 ஆவணம் மூலம் 6 சென்ட் கிரையம் பெற்றுள்ளேன்.

5. அது வீட்டு மனை ஆகும். எனது தந்தை பெயரில் ஏற்பட்ட UDR பட்டா மூல ஆவணமாக குறிப்பிட்டுள்ளோம். வா.சா.ஆ-5 ஆவணத்தின் மூலம் 5 சென்ட் மட்டும் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் பொதுப்பாதை 1 சென்ட் உள்ளது. அவ்வாறு பொதுப்பாதை 1 சென்ட் நீங்கலாக என குறிப்பிட்டு வா.சா.ஆ.5 ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். தங்கராஜ் மற்றும் பொன்னுசாமி அசல் வழக்கு

எண்.10/ 2009 வழக்கினை என் மீதும் என் தந்தைக்கு எதிராக தாக்கல் செய்து தீர்ப்பாணை எற்பட்ட பின்னர் வா.சா.ஆ.5 ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரிதான். சாட்சி தற்போது சரியல்ல என கூறுகிறார். வா.சா.ஆ.5 ஆவணத்தில் கண்ட சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு பாகம் உள்ளது என தீர்ப்பு ஏற்பட்ட விவரத்தை தெரிந்து கொண்டு சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல.

6. சர்வே எண்.538/2 சி சொத்தை பொறுத்து அசல் வழக்கு எண்.117/2013 வழக்கு என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு 117/2013 தாக்கல் செய்யும் போது அசல் வழக்கு எண்.10/2009 வழக்கின் தீர்ப்புரை பற்றிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 2018 ம் வருடம் அதுபற்றி தெரியும். அசல் வழக்கு எண்.10/2009 தீர்ப்பாணையை இரத்து செய்ய என்னால் மனு தாக்கல் செய்யப்பட்டது என்றும், அதனால் 2018 ம் வருடம் மேற்படி தீர்ப்பாணை விவரம் என சொல்வது தவறு என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.Bala Murugan
**Principal District Munsif,**
**Kulithalai.**